**சைதை சா. துரைசாமியின் மனிதநேயம்**
**ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்**
**எண்:28, முதல் பிரதானசாலை, சி.ஐ.டி.நகர், சென்னை - 600035.**
**போன் : 044 - 2435 8373, 24330095**
**Email:manidhanaeyam@gmail.com Website: www.mntfreeias.com**

**2023- 2024 குடிமையியல் தேர்வில் (Civil Services Exam) மனிதநேயத்தில் பயின்ற 25 பேரில், 17 மாணவர்களும், 11 மாணவியர்களும் வெற்றி பெற்றுள்ளனர்! இவர்களில் 6 பேர் (IAS) பதவிக்கும், 2 பேர் (IFS) பதவிக்கும், 8 பேர் (IPS) பதவிக்கும், 5 பேர் (IRS – IT&C&IT) பதவிக்கும் பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

**நாள் : 30.07.2024**

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு “மனிதநேய அறக்கட்டளை" தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமூகப் பணிகளைச் செய்து வருகிறது. இந்த அறக்கட்டளையின் சார்பில் நடத்தப்படும் சைதை துரைசாமியின் மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகத்தில் பயிற்சி பெற்று வெற்றி பெற்ற பல மாணவ – மாணவியர்கள் அரசுப் பணி பெற்றுள்ளனர்.

“மனிதநேயம் ஐஏஎஸ் கட்டணமில்லா கல்வியகம்” மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர்பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த 19 ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐஎப்.எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப் -I, II, IIA (DC, DSP, DRO, DEO, CTO), SUB-INSPECTOR, A.E (HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ, PWD (CIVIL, ELECTRICAL) போன்ற பதவிகளுக்கும் இதுவரை 3822க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்கள் வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மத்திய பணியாளர் ஆண்டுதோறும் ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ், ஐ.ஆர்.எஸ் மற்றும் பிற மத்திய அரசு பணிகளுக்கான தேர்வினை நடத்தி வருகிறது. முதல்நிலை தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்முக தேர்வு ஆகிய மூன்று நிலைகளை கொண்டது இந்த தேர்வு ஆகும்.

குரூப்-4 (VAO, Junior Assistant - Security, Non Security, Bill Collector - Grade - 1, Field Sureyor, Draftsman, Typist, Steno-Typist) போன்ற பதவிகளில் இதுவரை 40,000-க்கும் மேற்பட்டவர்கள் 211 சாதி பிரிவுகளில் வெற்றி பெற்று பணியில் உள்ளனர்.

மத்திய பணியாளர் தேர்வாணையம் (UPSC) 2023-ம் இந்த ஆண்டுக்கான ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் உள்ளிட்ட மொத்தம் 1105 காலிப் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு, 01.02.2023 அன்று அறிவிப்பு வெளியிட்டது. முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத் தேர்வை எதிர்கொள்ளும் மாணவர்கள் பட்டியல் வெளியிடப்பட்டது.

முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்ற தேர்வர்களுக்கு மாதாந்திர உதவித்தொகை வழங்கப்பட்டது.

முதன்மைத் தேர்வு 15, 16, 17.09.2023 மற்றும் 23, 24.09.2023 வரையிலும் வரை முதன்மைத் தேர்வு நடைபெற்றது.

முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் மாதிரி நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி, மனிதநேய ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா பயிற்சி மையத்தில் இலவசமாக நடத்தப்பட்டது.

நேர்முகத் தேர்வுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு, கீழ்க்கண்ட வசதிகள் அனைத்தும் எந்தவித கட்டணமுமின்றி வழங்கப்பட்டது.

1. பல்வேறு துறைகளை சார்ந்த முன்னாள் *IAS, IPS, IFS, IRS, IA&AS,* உளவியல் பயிற்சியாளர்கள் மற்றும் பத்திரிகைத் துறைகளில் சிறந்த பயிற்றுநர்கள் மூலம் தினந்தோறும் மாதிரி நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. வர இயலாதவர்களுக்கு இணையதளம் வழியாக, மாதிரி நேர்முகத் தேர்வுகள் நடத்தப்பட்டது.
2. குறிப்புகள், கையேடுகள் மற்றும் நேர்முகத் தேர்வு வழிகாட்டுதல் வகுப்புகள்
3. தேர்வர்களுக்கு தனிப்பட்ட வழிகாட்டுதல்
4. மேலும் நேர்முகத் தேர்வில் பங்குபெறும் ஒவ்வொரு தேர்வாளர்களுக்கும் தனித்தனியாக மாதிரி நேர்காணல் தேர்வுகள் மத்திய மற்றும் மாநில அரசு பணிகளில் பணியாற்றும் அரசு உயர் அதிகாரிகள் ஊடகங்கள் அதன் ஊடகவியலாளர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்களைக் கொண்டு மாதிரி நேர்காணல் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டது.
5. நேர்முகத் தேர்வில் பங்கு பெறுபவர்கள் டெல்லி சென்று வருவதற்கு விமான பயணச்சீட்டும், புதுடெல்லியில் தங்குவதற்கான வசதிகள் செய்து தரப்பட்டது.

இந்நிலையில், டெல்லியில் நடைபெற்ற நேர்முகத்தேர்வின் முடிவுகள் 16.04.2024 அன்று வெளியிடப்பட்டது. இதில் மனிதநேய மையத்தில் பயிற்சி பெற்று நேர்முகத் தேர்வில் கலந்து கொண்ட 79 மாணவ - மாணவியர்களில் 25 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

இதில் சென்னையை சேர்ந்த டாக்டர் S. பிரசாந்த் என்பர் அகில இந்திய அளவில் 78-வது இடத்தையும், திண்டுக்கல்லை சேர்ந்த செல்வி. M. சுபதர்ஷினி 83-வது இடத்தையும் பெற்றுள்ளனர்.

2023 – 2024 மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம் (*UPSC*) நடத்திய தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு 30.07.2024 இன்று பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 25 மாணவ மாணவியர்களில் (25) பேருக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அனைத்து வசதிகளும் மனிதநேய கட்டணமில்லா ஐஏஎஸ் கல்வி மையத்தின் சார்பில் மாணவர்களுக்கு இலவசமாக செய்து தரப்பட்டன.

## UPSC 2023-2024 பணி ஒதுக்கீடு

| வ. எண் | பெயர் | பணி | ரேங்க் |
|---|---|---|---|
| 1. | டாக்டர் S. பிரசாந்த் | IAS | 78 |
| 2. | M. சுபதர்(ஷி)னி | IAS | 83 |
| 3. | M. தரணி | IAS | 250 |
| 4. | T.A விக்னே(ஷ்) | IAS | 314 |
| 5. | K.M. கார்த்திக் ராஜா | IAS | 329 |
| 6. | சிந்து N. ராகவன் | IAS | 336 |
| 7. | கிரு(ஷ்)ணா ஸ்ரீ வஸ்டவ் | IFS | 444 |
| 8. | G. சத்ய நந்தினி | IFS | 513 |
| 9. | S. அஸ்வினி | IPS | 449 |
| 10. | E. கதிரவன் | IPS | 573 |
| 11. | A.K. கார்த்திகேயன் | IPS | 579 |
| 12. | G. சுப்புராஜ் | IPS | 605 |
| 13. | M.V. பிரசன்னகுமார் | IPS | 608 |
| 14. | V. சிவரஞ்சினி | IPS | 771 |
| 15. | S. இன்பா | IPS | 851 |

| | | | |
|---|---|---|---|
| 16. | *V.* அர்(ஷ)வர்தன் | IPS | 864 |
| 17. | *T.* அரவிந்த்குமாரன் | IRS (IT) | 348 |
| 18. | *V.* சாய்கிரண் | IRS (IT) | 712 |
| 19. | *V.* பேச்சி | IRS (C&IT) | 576 |
| 20. | *A.R.* வினோத் | IRS (C&IT) | 683 |
| 21. | *M.* ஜெயவாணி | IRS (C&IT) | 698 |
| 22. | *K.* இந்துமதி | IRMS | 832 |
| 23. | *M.* முத்தரசி | IA&AS | 795 |
| 24. | *K.* ஓவியா | IDAS | 796 |
| 25. | *J.* ஆ(ஷ்)க் உசைன் | IDES | 845 |

**IAS-6, IFS-2, IPS-8, IRS-(IT&C&IT)-5, IRMS-1, IA&AS-1, IDAS-1, IDES-1**

*என பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைவருக்கும் மனிதநேய அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் திரு.சைதை துரைசாமி அவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.*

**>>>>>>>>>>>>>>>>> <<<<<<<<<<<<<<<<<<<<**